14th August 1963]

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், சக்தி வாய்ந்த ஹார்ஸ் பவர் உள்ள ட்ராக்டர்களைக் கொண்டு ஒவ்வொரு விவசாயியும் அதிகமாக வேலை செய்ய முடியாமல் இருப்பதால், சிறு சிறு ஹார்ஸ் பவர் உள்ள ட்ராக்டர்களை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து பரீட்சை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பரீட்சை செய்வது இரண்டு மூன்று யூனியன்களில்தான். அதில் அதிகப் பெரியதாகவும், மிகச் சிறிதாகவும் இல்லாமல், நடுத்தரமான ட்ராக்டர்களைக் கொடுக்க வேண்டும் என்பது அபிப்பிராயம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்கள் பதிலில், இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் பரீட்சைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். இந்த இரண்டு மூன்று பஞ்சாயத்து யூனியன்களும் எந்த எந்த ஜில்லாக்களில் உள்ளன என்று அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பே விடை அளித்தேன். கனம் அங்கத்தினர் அதைக் கேட்கவில்லையோ அல்லது பின்னால் வந்தார்களோ தெரியாது. விவசாய இலாகா எந்த யூனியன்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசனை கூறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களிடமிருந்து தகவல் வரவில்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : இப்பொழுது நிலச் சீர்திருத்தம் காரணமாக குறைந்த ஏக்கரேஜ் உள்ள நிலங்களாக இருப்பதால், தஞ்சை ஜில்லாவிலுள்ளவர்கள் ட்ராக்டர் வாங்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பரீட்சையை தஞ்சை ஜில்லாவிலேயே ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிலச் சீர்திருத்தம் காரணமாக, நிலம் ஒன்றும் மாறவில்லை. நிலம் அப்படியேதான் இருக்கிறது. ஒருக்கால் உண்மையிலேயே ஏக்கரேஜ் குறைந்திருந்தால், பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படும் ட்ராக்டர்களை கூட்டுறவு முறையிலே பயன் படுத்திக் கொள்ளலாம்.

Milk Pasteurisation at Thanjavur

* 139 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any scheme for establishing a milk pasteurisation plant at Thanjavur; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The installation of the plant for Pasteurisation of milk at Thanjavur by the Thanjavur Co-operative Milk Supply Union is expected to be started in the year 1963–64. The work for the construction of building, etc., will be commenced by about July, 1963. The procurement and installation of machinery will be completed by the end of 1964 and the plant commissioned.

[14th August 1963

Two chilling stations are contemplated under the scheme, one at Tiruvarur and the other at Mayuram or Mannargudi. The selection of the place for the chilling plant has not yet been finalised. These chilling stations will collect and chill all the surplus milk available in the area within a radius of about 10 to 15 miles and the milk so chilled will be transported to Thanjavur for processing, bottling and distribution in the urban area of Thanjavur.

(அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் கூட்டுறவு பால் வழங்கும் யூனியன், தஞ்சாவூரில் பாஸ்டர் முறைப்படி பாலைப் பதப்படுத்தும் இயந்திரத்தை 1963-64-ல் நிறுவத் தொடங்கும். கட்டிடம் கட்டுதல் போன்ற வேலைகள் 1963 ஜூலையில் ஆரம்பிக்கப்படும். தேவைப்படும் இயந்திரங்களை வாங்கி நிறுவும் வேலை 1964-ம் ஆண்டு இறுதிக்குள் பூர்த்தியடைந்து நிலையம் செயல்படத் துவங்கும்.

இத்திட்டத்தின்கீழ் "பாலைக் குளிர வைக்கும் நிலையங்கள்" இரண்டு—திருவாரூரில் ஒன்றும், மாயூரம் அல்லது மன்னார்குடியில் மற்றொன்றும்—அமைக்க உத்தேசித்துள்ளோம். ஆனால் இந்நிலையங்களை நிறுவும் இடங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்த நிலையங்களிலிருந்து சுமார் 10 அல்லது 15 மைல் சுற்றுவட்டாரங்களில் உபரியாகக் கிடைக்கும் பாலைச் சேகரித்துக் குளிர வைப்பார்கள். இவ்வாறு குளிர வைக்கப்பட்ட பாலைப் பதப்படுத்தி புட்டிகளில் நிரப்பி நகர்ப்பகுதிகளில் வழங்குவதற்காகத் தஞ்சாவூருக்கு அனுப்புவார்கள்.

* 140 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) when the plant for pasteurisation of milk at Thanjavur will be started; and

(*b*) whether any cold-storage and sub-distribution centres will be located at Tiruvarur, Mannargudi and Mayuram?

The Hon. Sri P. KAKKAN : (*a*) The installation of the plant for pasteurisation of milk at Thanjavur by the Thanjavur Co-operative Milk Supply Union is expected to be started in the year 1963-64.

(*b*) Two chilling stations are contemplated under the scheme, one at Tiruvarur and the other at Mayuram or Mannargudi.

(அ) தஞ்சாவூரில், தஞ்சாவூர் கூட்டுறவு பால் வழங்கும் யூனியன், பாலைக் குளிர வைப்பதற்காக 1963-64-ல் யந்திர சாதனங்களை நிறுவ உத்தேசிக்கிறோம்.

(இ) இத்திட்டத்தின்கீழ், பாலைக் குளிர வைப்பதற்கு இரண்டு நிலையங்களை நிறுவ உத்தேசித்துள்ளது. ஒன்று திருவாரூரில் நிறுவப்படும். மற்றொன்று மாயூரம் அல்லது மன்னார்குடியில் நிறுவப்படும்.